# ஏறாவூர் நகரப் பிரதேச சபை

# மட்டக்களப்பு மாவட்டம்

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மிளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2011 யூன் 07 ஆந் திகதி கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2010 மார்ச் 08 ஆந் திகதி கணக்காய்விற்காக சமரப்பிக்கப்ட்டிருந்தது.

### 1.2 அபிப்பிராயம்

எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப் பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமைய ஏறாவூர் நகரப் பிரதேச சபையானது 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்குப் பதிவேடுகளைப் பேணியிருந்ததுடன் எனது இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களினால் நிதிசார் கூற்றுக்களில் எற்படும் தாக்கங்களைத்தவிர பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கொளகைகளுக்கு அமைய ஏறாவூர் நகரப் பிரதேச சபையின் 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலைவரத்தையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் செயற்பாட்டின் நிதிசார் விளைவுகளையும் காசோட்டத்தையும் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 வங்கிக் கணக்குகள்

வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுக்கள் தொடர்பான பகுப்பாய்வுப் பரிசோதனையின் போது ரூபா. 185,446 பொறுமதியான வைப்புக்கள் 8 ஆண்டுகளுக்கு மேலாக தேறாதிருந்தமை வெளிப்படுத்தப்பட்டன.

### 1.3.2 செலுத்த வேண்டிய கணக்குகள்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 8 ஆண்டுகளுக்கு மேலாக செலுத்த வேண்டியிருந்த மீதிகள் ரூபா 3,994,615 ஆக இருந்தது.

### 1.3.3 இணங்காமைகள்

சுகாதார சேவைகள் பணிப்பாளரின் 1992 செப்தெம்பர் 30 ஆந் திகதிய 1769 ஆம் இலக்க சுற்றுநிருபத்திற்கு முரணாக ரூபா 83,047 கூட்டுத்தொகையான வரைதல் கட்டணங்கள் பொது சுகாதார பரிசோதகர்களுக்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

## 2. நிதிசார் மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய சபையின் வருமானம் ரூபா 11,959,947 ஆகக் இருந்ததுடன் அதற்குப் நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா. 5,849,474 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானங்கள்

தலைவரால் சமர்ப்பிக்கப்பட்டவாறு மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்கான மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானங்கள் தொடர்பான நிலைமை கீழே தரப்படுகின்றன.

| | வருமான விடயம் | 2010 மதிப்பிடப் பட்டது | 2010 உள்ளபடி யானது | 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிலுவைகள் | 2009 மதிப்பிடப் பட்டது | 2009 உள்ளபடி யானது | 2009 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிலுவைகள் |
|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 |
| (i) | இறைகளும் வரிகளும் | 1,895 | 773 | 9,688 | 2,057 | 959 | 8,628 |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| (ii) | குத்தகை வாடகைகள் | 2,676 | 2,062 | 2,162 | 4,348 | 4,079 | 2,300 |
| (iii) | அனுமதிப் பத்திரக் கட்டணங்கள் | 1,182 | 467 | 974 | 692 | 787 | 578 |
| (iv) | வேறு வருமானங்கள் | 2,508 | 3,145 | 101,237 | 22,596 | 23,950 | 1,713 |

## 2.3 செலவினக் கட்டமைப்பு

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்கான மதிப்பிடப்பட்டவை, உள்ளபடியான செலவினம் மற்றும் முரண்கள் என்பன கீழே தரப்படுகின்றன.

| செலவின விடயம் | 2010 மதிப்பிடப் பட்டது | 2010 உள்ளபடி யானது | 2010 முரண் | 2009 மதிப்பிடப் பட்டது | 2009 உள்ளபடி யானது | 2009 முரண் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| மீண்டெழும் செலவினம் | | | | | | |
| ஆளணி வேதனங்கள் | 22,704 | 20,970 | 1,734 | 21,106 | 18,535 | 2,571 |
| ஏனையவை | 4,859 | 3.138 | 1,721 | 4,838 | 3,278 | 1,560 |
| உப மொத்தம் | 27,563 | 24,108 | 3,455 | 25,944 | 21,813 | 4,131 |
| மூலதனச் செலவினம் | 22,914 | 9,530 | 13,384 | 5,737 | 3,947 | 1,790 |
| முழு மொத்தம் | 50,477 | 33.638 | 16,839 | 31,681 | 25,760 | 5,921 |

## 2.4 மனித வள முகாமைத்துவம்

### அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான ஆளணி

சபையின் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான ஆளணியின் விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| | 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | |
|---|---|---|
| பதவியினர் தரங்கள் | அங்கீகரிக்கப்பட்டது | உள்ளபடியானது |
| பதவிநிலைத் தரங்கள் | 01 | 01 |
| இரண்டாம் தரங்கள் | 20 | 19 |
| ஆரம்ப தரங்கள் | 65 | 51 |
| ஏனைய (அமைய/ தற்காலிக) | - | 25 |
| | 86 | 96 |

## 2.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 2.5.1 பெறவேண்டிய கணக்குகள்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறவேண்டிய கணக்கு மீதிகள் ரூபா 1,166,957 ஆக இருந்தது.

### 2.5.2 அறவிடவேண்டிய பதவியினர் கடன்கள்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 3 வருடங்களுக்கும் மேலாக அறவிடவேண்டிய பதவியினர் கடன் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 266,707 ஆக இருந்தது.

**2.5.3 மெய்மையாய்வு செய்யப்படாத சொத்துக்கள்**

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பௌதீக மெய்மையாய்வுகள் / கணிப்பீட்டுச் சபை அறிக்கைகள் மூலம் உறுதிப்படுத்தப்படாது புத்தக மீதிகளில் கணிப்பிடப்பட்ட நிலையான சொத்துக்களின் பெறுமதி ரூபா 40,835,467 ஆகும்.

**2.6 இனங்காணப்பட்ட நட்டங்கள் மற்றும் சேதங்கள்**

பிரதேச சபையால் பேணப்பட்ட புத்தகங்கள் மற்றும் தெரிவுக் கணக்காய்வின் பிரகாரம் ரூபா 10,000 பெறுமதியான 200 நூலகப் புத்தகங்களுக்கு நட்டங்கள் மற்றும் சேதங்கள் ஏற்பட்டிருந்தமை வெளிப்படுத்தப்பட்டது.

**2.7 உள்ளகக் கணக்காய்வு**

சபையால் போதியளவு உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) உள்ளகக் கணக்காய்வு

(ஆ) வருமான நிர்வாகம்